குடியேற்ற நிலையைக் கருத்தில் கொள்ளாமல்

உங்களுக்கு உரிமை உண்டு:

- பயிற்சிக் காலக்கட்டங்கள் உட்பட, வேலை செய்த அனைத்து மணி நேரங்களுக்கும் ஊதியம் பெற உங்களுக்கு உரிமை உண்டு
- குறைந்தபட்ச ஊதியம் பெறவும், அதிக நேர வேலைக்கு மிகை ஊதியம் பெறவும் மற்றும் வழக்கமாக ஊதியம் பெறவும் (வழக்கமாக வாரந்தோறும் அல்லது இரு வாரத்திற்கு ஒருமுறை) உங்களுக்கு உரிமை உண்டு
- உங்களுடைய சம்பளப் பிடித்தங்கள் குறித்து அறிந்துகொள்ளவும், எழுத்துப்பூர்வமான முன் ஒப்புதல் இன்றி ஒரு போதும் உங்கள் சம்பளத்தில் பிடித்தங்கள் மேற்கொள்ளப்படாமல் இருக்கவும் உங்களுக்கு உரிமை உண்டு
- பாகுபாடு, பாலியல் துன்புறுத்தல் மற்றும் முறைகேடு ஆகியவற்றின் பாதிப்பு இல்லாத பாதுகாப்பான சூழலில் வேலை செய்வதற்கான உரிமை உங்களுக்கு உண்டு
- பழிவாங்கல் பயம் இல்லாமல் nys தொழிலாளர் துறையின் உதவியைக் கோருவதற்கான உரிமை உங்களுக்கு உண்டு

கட்டாயமாக வேலை வாங்குதல் ஒரு குற்றமாகும்!

பின்வருமாறு இருப்பின், அது உங்கள் உரிமைகள் மீறப்படும் தண்டனைக்குரிய குற்றமாகும்:

- கடனை அடைப்பதற்காக வேலை செய்ய வேண்டும் என்று உங்களிடம் சொல்லப்படுவது
- உங்கள் பாஸ்போர்ட்டை அல்லது ஐடி-ஐ உங்கள் முதலாளி எடுத்துக்கொள்வார் என்று உங்களிடம் சொல்லப்படுவது
- கிரீன் கார்டு அல்லது பணம் போன்ற நீங்கள் பெறாத பயன்களைப் பெறுவீர்கள் என்று உறுதியளிக்கப்படுவது
- வேலை செய்யாவிட்டால் குடியேற்ற அதிகாரி அல்லது போலீஸ் வரவழைக்கப்படுவார்கள் என்று அச்சுறுத்தப்படுவது
- உங்களுக்கு அல்லது உங்கள் குடும்பத்தினருக்குத் தீங்கிழைக்கப்படும் என்று அச்சுறுத்தப்படுவது
- உண்மையில் தீங்கிழைக்கப்படுவது, அல்லது ஒரு குடும்ப உறுப்பினருக்கு தீங்கிழைக்கப்படுவது

உங்களை நீங்களே பாதுகாத்திடுங்கள்!

இதன்பதிவை வைத்திருங்கள்:

- நீங்கள் பணியாற்றிய நாட்கள் மற்றும் மணி நேரங்கள்
- நீங்கள் எவ்வளவு ஊதியம் பெற்றீர்கள் மற்றும் எப்போது ஊதியம் பெற்றீர்கள்
- வேலையின் போது நடைபெற்ற முக்கிய நிகழ்வுகளின் (காயங்கள், அச்சுறுத்தல்கள் அல்லது சச்சரவுகள்) தேதிகள் மற்றும் நேரங்கள் மற்றும் அவை குறித்து நீங்கள் யாரிடம் புகாரளித்தீர்கள் என்ற விவரம்

உங்களுடைய உரிமைகள் பாதுகாக்கப்பட்டு, எங்கள் உழைக்கும் குடும்பங்களை வளமடையச் பற்றியும் ஊதியம் பெறுவதற்கான உரிமையை 24 மணிநேரம் அடிக்கத்தரை இலவசமாக 888.373.7888 எனும் 24 மணிநேர துறை அலுவலகங்களை அல்லது 877.466.9757 எனும் DOCE துறை அலுவலகங்களை அழையுங்கள்.

trainingdlabor.ny.gov என்றும் மின்னஞ்சல் முகவரிக்கும் இங்கும் மின்னஞ்சல் செய்யலாம்

888-469-7365 | f ✓ ◻ in ▶ @nyslabor | www.labor.ny.gov

நியூயார்க் மாநில் பணியாளர் துறை ஒரு சம வாய்ப்பு பணிக்கான பணியமர்த்தல் வழங்குநர். ஒன்றுபடுங்கள், கலந்தாலோசனைகள் மேம்படுத்தப்பட்டுள்ள தகவலுக்கான ஒலிவடிவம் மாற்று வடிவங்களுக்கு 1-800-662-1220 (ஆங்கிலம்) / 1-877-662-4886. TTY/TDD 711 அல்லது

P746.3 TA (02/24)